| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

கூட்டம் எண். 6/2022 நாள். 30.09.2022

## சாதாரணக் கூட்டம்

குன்றத்தூர் நகராட்சியின் செப்டம்பர்-2022 மாதத்திற்கான சாதாரணக்கூட்டம் 30-09-2022ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நகரமன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

வருகை புரிந்தவர்கள்:

| வார்டு எண் | பெயர் |
|---|---|
| 18 | திரு. கோ. சத்தியமூர்த்தி, நகர்மன்ற தலைவர் |
| 12 | திரு. தே. திருநாவுக்கரசு, துணைத் தலைவர் |
| 1 | திரு. சு. கார்த்திக் |
| 2 | திரு. மு. குப்புசாமி |
| 3 | திருமதி. காயத்ரி கௌதமன் |
| 5 | திருமதி. வித்யா ஹரிபாபு |
| 6 | திருமதி. கலாவதி சங்கர் |
| 7 | திருமதி. வைசல்யாதேவி ஹரிகிருஷ்ணன் |
| 8 | திரு. ந. கருணாநிதி |
| 9 | திருமதி. மோ. பவித்ரா |
| 10 | திருமதி. லட்சுமி சுரேஷ் |
| 11 | திருமதி. பவானி மாணிக்கம் |
| 13 | திருமதி. கல்பனா கதிரவன் |
| 14 | திருமதி. வசந்தி மணிமாறன் |
| 15 | திருமதி. ச. சசிகலா |
| 16 | திரு. ர. ராஜி |
| 17 | திருமதி. பானு சத்தியமூர்த்தி |
| 19 | திரு. தே. அசோகன் |

| வ. எண். | பொருள் |
|---|---|
| | 20. திரு. ம. மதன் |
| | 21 திருமதி. கி. ஜெகதீஸ்வரி |
| | 22 திரு. வை. சாரங்கபாணி |
| | 23 திரு. ச. சந்துரு |
| | 24 திருமதி. லதா ரவிச்சந்திரன் |
| | 25 திருமதி. கல்பனா சுந்தர்ராஜ் |
| | 26 திருமதி. மெர்சி எஸ்தர் ராணி மரிய மைக்கேல் ரவி |
| | 27 திரு. கார்த்திகேயன் வெங்கடேசன் |
| | 29 திரு. நா. ராஜா |
| | 30 திருமதி. எழிலரசி தெய்வசிகாமணி |

**பொருள் எண்.1**

குன்றத்தூர் நகராட்சி ஆணையரின் ஆகஸ்டு-2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.2**

குன்றத்தூர் நகராட்சியின் ஆகஸ்டு-2022 மாதத்திய பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு.

| மாதம் | பிறப்பு | இறப்பு | இறந்து பிறந்தவைகள் |
|---|---|---|---|
| ஆகஸ்டு-2022 | 1 | 21 | - |

**பொருள் எண்.3**

குன்றத்தூர் நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் ஆகஸ்டு-2022ம் மாத கேட்பு, வசூல், நிலுவைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

| | கேட்பு ரூ லட்சத்தில் | வசூல் ரூ.லட்சத்தில் | நிலுவை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| வரியினம் | 162.6 | 25.89 | 136.7 |
| வரியில்லா இனம் | 15.81 | 1.59 | 14.22 |
| குடிநீர் கட்டணம் | 44.76 | 7.13 | 37.63 |

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|
| | தீர்மானம் எண். 153<br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.<br>30/9/22 |
| | தீர்மானம் எண். 154<br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.<br>30/9/22 |
| | தீர்மானம் எண். 155<br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.<br>30/9/22 |

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.4**

குன்றத்தூர் நகராட்சியின் ஆகஸ்டு-2022ம் மாத செலவுசீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

ஆகஸ்டு-2022 - செ.சீ.எண்.184 முதல் 226 வரை

தீர்மானம் எண்.156

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/9/22

**பொருள் எண்.5**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 14.09.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1. | பொன்னியம்மன் கோயில் மெயின் சாலையில் தார்சாலை புதுப்பித்தல் | 1200000 | C.N.இராமச்சந்திரன் | 0.05% குறைவு |
| | | | N.சிவக்குமார் | 0.50% அதிகம் |
| 2 | திருநாகேஸ்வரம் காலனி நாவிதர் மெயின் ரோடு தார்சாலை புதுப்பித்தல் | 1500000 | C.N.இராமச்சந்திரன் | 0.10% குறைவு |
| | | | N.சிவக்குமார் | 0.60% அதிகம் |
| 3 | ஒட்டக்கூத்தர் சாலையில் தார்சாலை புதுப்பித்தல் | 1300000 | C.N.இராமச்சந்திரன் | 0.07% குறைவு |
| | | | N.சிவக்குமார் | 0.70% அதிகம் |
| 4 | பூஜா அவென்யூ பகுதியில் தார்சாலை புதுப்பித்தல் | 1150000 | D.குமரவேல் | 0.10% குறைவு |
| | | | S.கோபி | 0.60% அதிகம் |
| 5 | சிவாவிஷ்ணு நகர் ராமலிங்கம் தெரு மற்றும் மாசிலாமணி தெருவில் தார்சாலை அமைத்தல் | 1950000 | N.பாலமுருகன் | 0.12% குறைவு |
| | | | C.N.இராமச்சந்திரன் | 0.75% அதிகம் |
| 6 | குட்டி விநாயகர் நகர் 8வது மேற்கு குறுக்கு தெரு மேத்தா நகர் தார்சாலை அமைத்தல் | 1300000 | N.ஹேமபூசனம் | 0.10% குறைவு |
| | | | S.கோபி | 0.80% அதிகம் |
| 7 | குட்டி விநாயகர் நகர் 8வது மேற்கு தெரு மேத்தா நகர் தார்சாலை அமைத்தல் | 1600000 | N.ஹேமபூசனம் | 0.15% குறைவு |
| | | | S.கோபி | 0.65% அதிகம் |
| 8 | தேவி நகர் 1வது மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 1500000 | D.குமரவேல் | 0.07% குறைவு |
| | | | S.கோபி | 0.55% அதிகம் |
| 9 | தேவி நகர் 2வது மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 1300000 | N.பரணி | 0.10% குறைவு |
| | | | N.பாலமுருகன் | 0.70% அதிகம் |

தீர்மானம் எண்.157

குறைந்த மதிப்பீடு வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/9/22

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.6**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 16.09.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை கிடங்கின் மேற்கு பக்கத்தில் ஜிங்க் ஷீட் தடுப்பு வேலி அமைத்தல் | 950000 | C.N.இராமச்சந்திரன் | 0.05% குறைவு |
| | | | S.கோபி | 0.75% அதிகம் |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை கிடங்கின் வடக்கு பக்கத்தில் ஜிங்க் ஷீட் தடுப்பு வேலி அமைத்தல் மற்றும் CCTV கேமரா பொருத்துதல் | 720000 | C.N.இராமச்சந்திரன் | 0.07% குறைவு |
| | | | S.கோபி | 0.55% அதிகம் |
| 3 | துலுக்கத்தெருவில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சாலையோர வியாபாரிகளுக்கான தற்காலிக கடைகள் அமைத்தல் | 730000 | C.N.இராமச்சந்திரன் | 0.12% குறைவு |
| | | | S.கோபி | 0.80% அதிகம் |
| 4 | மணிகண்டன் நகர் பூங்காவில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 260000 | C.N.இராமச்சந்திரன் | 0.06% குறைவு |
| | | | S.கோபி | 0.75% அதிகம் |

தீர்மானம் எண்.158

குறைந்த மதிப்பீடு வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/9/22

**பொருள் எண்.7**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 20.09.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1. | குன்றத்தூர் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் (20 எண்ணிக்கை) கட்டுதல் | 2200000 | C.N.இராமச்சந்திரன் | 0.05% குறைவு |
| | | | B.R.Construction | 9.78% அதிகம் |

தீர்மானம் எண்.159

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/9/22

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.8**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 23.09.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பந்தப்பதிவேட்டினை பார்வையிட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளியின் நிலை (மதிப்பீட்டினை விட) |
|---|---|---|---|---|
| 1. | விஷால் நகர் காந்தி சாலை மெயின் ரோட்டில் மழைநீர் கால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் | 900000 | C.N.இராமச்சந்திரன் | 0.08% குறைவு |
| | | | S.கோபி | 0.45% அதிகம் |
| 2 | விஷால் நகர் காந்தி சாலையில் மழைநீர் கால்வாயுடன் கூடிய சிறுபாலம் அமைத்தல் | 800000 | C.N.இராமச்சந்திரன் | 0.12% குறைவு |
| | | | S.கோபி | 0.58% அதிகம் |
| 3 | விஷால் நகர் காந்தி சாலை குறுக்கு தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 750000 | C.N.இராமச்சந்திரன் | 0.05% குறைவு |
| | | | S.கோபி | 0.73% அதிகம் |
| 4 | கரைமாநகர் பள்ளத்தெரு 1வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 500000 | C.N.இராமச்சந்திரன் | 0.07% குறைவு |
| | | | S.கோபி | 0.85% அதிகம் |
| 5 | அமராவதி குளத்திற்கு நடைபாதை மற்றும் மேம்பாடு பணி செய்தல் | 990000 | C.N.இராமச்சந்திரன் | 0.10% குறைவு |
| | | | S.கோபி | 0.53% அதிகம் |
| 6 | நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள ஆணையர் அறைக்கு பொய்கூரை (False Sealing), வர்ணம் பூசுதல் மற்றும் குளிரூட்டி வசதி (Air Conditioner) செய்தல் | 250000 | C.N.இராமச்சந்திரன் | 0.06% குறைவு |
| | | | S.கோபி | 0.55% அதிகம் |

தீர்மானம் எண்.160

குறைந்த மதிப்பீடு வழங்கியுள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

[signature] 30/12/22

| வ. எண். | பொருள் |
|---|---|

**பொருள் எண்.9**

குன்றத்தூர் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் நாளிதழில் விளம்பரம் செய்தது, அருள்மிகு வேம்புலியம்மன் கோயில் திருவிழாவிற்கு தற்காலிக கழிப்பிடம் அமைத்தது மற்றும் திட்டப்பணிகள், பொதுநிதிப்பணிகள் துவக்க விழாவிற்கு பந்தல், சேர், மின்விசிறி, மேடை, ஆடியோ மைக் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்தமைக்கு தொகை வழங்கக்கோரி கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற பட்டியல்களுக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | விவரம் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-2023 குன்றத்தூர் நகராட்சியின் நில அளவை எண்.1395/2-ல் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுதல் (ஒப்பந்தப்புள்ளி நாள்.28.07.2022) | M/s.Kal Publications (P) Ltd | 3300360294 / 13.07.2022 | 6636/- |
| 2 | 15வது நிதிக்குழு மான்யம் 2021-2022 (Untied Grant) திட்டப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளியினை பார்வை 1ல் காணும் விவரப்படி தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தது | Daily Thanthi | 2223CNI111139938 / 05.08.2022 | 9240/- |
| 3 | குன்றத்தூர் நகராட்சி அருள்மிகு வேம்புலியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக விழா 09.09.2022 அன்று நடைபெறுவதை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காக தற்காலிக கழிப்பிடம் அமைத்தது | M/s.Flush N Rush Pvt Ltd | CHN/2022/09/0723 / 09.09.2022 | 7080/- |
| 4 | மாண்புமிகு சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் 09.09.2022 அன்று நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதிப்பணிகள் துவக்க விழாவிற்கு பந்தல், சேர், மின்விசிறி, மேடை, ஆடியோ மைக் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்தது | M/s.சங்கரன் ஆடியோ நிறுவன உரிமையாளர் திரு.C.தங்கராஜ் | 09.09.2022 | 34600 |

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|
| | தீர்மானம் எண்.161 |
| | ஒப்புதல் அளிக்கப்படுகிறது |
| | [signature] 30/9/22 |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.10**

குன்றத்தூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு மற்றும் சிக்கன் குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க தற்பொழுது உள்ள 33 பணியாளர்களால் முழுமையாக பணி நிறைவு செய்யாமல் டெங்கு காய்ச்சல் உருவாகுவதால் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.250/இ5/2022 நாள்.01.09.2022ன்படி வழிகாட்டு நெறிமுறைகளின்படி 72 தற்காலிக DBC பணியாளர்களை அமர்த்தி டெங்கு காய்ச்சல் நோய்த்தடுப்பு பணியை தீவிரப்படுத்தவும், மேலும் இப்பணியை Agro நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண். 162
ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
30/9/22

**பொருள் எண்.11**

குன்றத்தூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சியில் இரண்டு டிராக்டர், ஒரு Tata Ace மற்றும் 18 எண்ணிக்கை மின்சாரத்தினால் இயங்கும் பேட்டரி வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி நடைபெற்று வருகிறது.

இந்நகராட்சிப் பகுதியில் 4 மெயின் ரோடுகள் மற்றும் 17946 வீடுகள் உள்ளதால் வார்டு எண்.1, 12, 3, 5 மற்றும் 6வது வார்டுகளில் போதிய வாகனங்கள் இல்லாததால் குப்பைகள் சேகரிப்பதில் தேக்கம் ஏற்படும் சூழல் நிலவுகிறது. எனவே குப்பைகளை தரம் பிரித்து அன்றாடம் திடக்கழிவு மேலாண்மை பணியை தொடரவும் வாகனங்கள் குறைவாக உள்ளதாலும் அவசர அவசியம் கருதி 3 எண்ணிக்கை Tata Ace வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி திடக்கழிவுகளை சேகரிக்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

தீர்மானம் எண். 163
ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
30/9/22

**பொருள் எண்.12**

குன்றத்தூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க மற்றும் காலை, மாலை வேளைகளில் டெங்கு பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் வார்டுகளில் புகை மருந்து அடிக்க தேவையான Pyrethrum Extract 2% குறைவாக இருப்பதால் தமிழ்நாடு மருத்துவ கழகத்தின் அனுமதி பெற்ற நிறுவனத்தின் மூலமும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படியும் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனத்திடம் இருந்து 300 லிட்டர் Pyrethrum Extract 2% கொள்முதல் செய்து கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

தீர்மானம் எண். 164
ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
30/9/22

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.13**<br>குன்றத்தூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் 1 முதல் 30 வார்டுகளில் உள்ள பொதுகழிப்பிடம் ஒன்று மற்றும் நான்கு சமுதாய கழிப்பிடங்கள் பழுதடைந்துள்ளதால் மேற்படி கழிப்பிடங்களில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து வெள்ளை அடித்து, மின்சார வசதி, தண்ணீர் வசதி போன்ற வசதிகளை உண்டாக்கி கழிவறையின் முன்புறம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பைகள் தரம் பிரித்தல், கொரோனா விழிப்புணர்வு (கை கழுவுதல் முறை) மற்றும் பொதுசுகாதார விழிப்புணர்வு ஓவியங்கள் வரைந்து பராமரிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>\|\| | | தீர்மானம் எண்.165<br>ஒப்புதல் அளிக்கப்படுகிறது.<br>30/9/22 |
| | **பொருள் எண்.14**<br>குன்றத்தூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் குன்றத்தூர் பேரூராட்சியாக இருந்த நிலையில் இருந்து தற்போது வரை நகராட்சியின் மேல் பகுதியில் உள்ள தட்டுமுட்டு சாமான்கள் அதிகமாக உள்ளதாலும், பயன்பாட்டிற்கு உபயோகமில்லாமல் இருப்பதால் மேற்படி பொருட்களை உள்ளூர் காய்லான் கடையின் மூலம் விலைப்புள்ளி பெற்று ஏலத்தில் விட்டு அலுவலக பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>\|\| | | தீர்மானம் எண்.166<br>ஒப்புதல் அளிக்கப்படுகிறது.<br>30/9/22 |
| | **பொருள் எண்.15**<br>குன்றத்தூர் நகராட்சியில் நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்தும் விதமாக நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பில் உள்ள சம்மந்தம் நகர் பூங்கா, தேவகி நகர் பூங்கா, தேவி நகர் பூங்கா, மணிகண்டன் நகர் பூங்கா, சேக்கிழார் நகர் பூங்கா, ஐஸ்வர்யம் நகர் பூங்கா, மேத்தா நகர் பூங்கா, மெட்ரோ ஹைடெக் பூங்கா, பூபதி அவென்யூ பூங்கா, அருணாச்சலேஸ்வரர் நகர் பூங்கா ஆகிய பூங்காக்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை (Rain Water Harvesting) ஏற்படுத்த மதிப்பீடு ரூ.2,00,000/-க்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>\|\| | | தீர்மானம் எண்.167<br>ஒப்புதல் அளிக்கப்படுகிறது.<br>30/9/22 |
| | **பொருள் எண்.16**<br>குன்றத்தூர் நகராட்சியில் நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்தும் விதமாக நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழாண்டை தெரு, அங்காள பரமேஸ்வரியம்மன் கோயில் தெரு மற்றும் மணஞ்சேரி பிள்ளையார் கோயில் தெரு ஆகிய பகுதியில் உள்ள 3 எண்ணிக்கையிலான பயன்படுத்தப்படாத கிணறுகள் தூர்வாரி சுத்தம் செய்து அவற்றிற்கு மோட்டார் பொருத்தி, அருகில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய மதிப்பீடு ரூ.220000/-க்கு பொதுநிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>\|\| | | தீர்மானம் எண்.168<br>ஒப்புதல் அளிக்கப்படுகிறது.<br>30/9/22 |

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.17**

குன்றத்தூர் நகராட்சியில் சொத்துவரி பெயர் மாற்றக்கட்டணம் பின்வரும் விவரப்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| குறைந்தபட்ச பெயர் மாற்றக் கட்டணம் | - | ரூ.500/- |
| சொத்து மதிப்பு 1.00 லட்சம் முதல் 10.00 லட்சம் வரை | - | ரூ.1000/- |
| சொத்து மதிப்பு 10.00 லட்சம் முதல் 20.00 லட்சம் வரை | - | ரூ.2000/- |
| சொத்து மதிப்பு 20.00 லட்சத்திற்கு மேல் | - | ரூ.2500/- |

குன்றத்தூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு பணி நடைபெற்று வருகிறது. எனவே 01.04.2022 முதல் பின்வரும் விவரப்படி சொத்தவரி பெயர்மாற்றக் கட்டணம் வசூலிக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| குறைந்தபட்ச பெயர் மாற்றக் கட்டணம் | - | ரூ.1000/- |
| சொத்து மதிப்பு 1.00 லட்சம் முதல் 10.00 லட்சம் வரை | - | ரூ.2000/- |
| சொத்து மதிப்பு 10.00 லட்சம் முதல் 20.00 லட்சம் வரை | - | ரூ.3000/- |
| சொத்து மதிப்பு 20.00 லட்சத்திற்கு மேல் | - | ரூ.5000/- |

தீர்மானம் எண்.169

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

**பொருள் எண்.18**

குன்றத்தூர் நகராட்சியில் Airport Authority-ன் சுற்றுச்சூழல் குழு மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகம் ஆய்வு செய்யப்பட்டதில் திறந்தவெளி குப்பை கிடங்கில் குப்பைகள் கொட்டப்படுவதால், அது பறவைகளை ஈர்ப்பதின் காரணமாக விமான விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே சென்னை விமான நிலையத்தை சுற்றி 10 கி.மீ. சுற்றளவில் திறந்தவெளி குப்பை கிடங்குகள் செயல்படுத்த கூடாது என நேரில் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து அவசர அவசியத்தினை முன்னிட்டு திடக்கழிவு மேலாண்மை திட்ட குப்பை கொட்டுமிடத்தில் திறந்தவெளியில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு இவ்வலுவலக விலைப்புள்ளி அறிக்கை ந.க.எண்.65/2022/அ1 நாள்.08.07.2022ன்படி 15.07.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு.N.ஹேமபூசனம் என்பவருக்கு பொதுசுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டு குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.144 நாள்.30.08.2022ன்படி பட்டியல் தொகை வழங்க மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்காணும் பணி முடித்தமைக்கு ஒப்பந்ததாரர் திரு.N.ஹேமபூசனம் என்பவருக்கு முதல் பகுதித் தொகை ரூ.954500/-னை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு மற்றும் இரண்டாவது பகுதி பட்டியல் தொகை ரூ.9,50,000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண்.170

முதல் பகுதி தொகை வழங்கியமைக்கும் மற்றும் இரண்டாவது பகுதி தொகை வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

30/9/22

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.19**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டு பகுதிகளிலும் உள்ள மழைநீர் கால்வாய்கள் தூர்வாரி சுத்தம் செய்ய நகராட்சி மன்ற தீர்மானம் எண்.11 நாள்.31.03.2022ன்படி ஒப்புதல் பெறப்பட்டதை தொடர்ந்து KRS Service நிறுவனத்தின் மூலம் 20 முதல் 30 வார்டுகளில் மழைநீர் கால்வாய்கள் தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டமைக்கு இறுதி தொகையாக ரூ.950000/- வழங்க குன்றத்தூர் நகராட்சி மன்ற தீர்மானம் எண்.132 நாள்.30.08.2022ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி 20 முதல் 30 வார்டுகளில் கால்வாய்கள் அதிகமாக உள்ளதால் வார்டு எண்.20 முதல் 27 வார்டுகளில் மட்டுமே பணி முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கப்பட்டது. எனவே மீதமுள்ள 28 முதல் 30 வார்டுகளில் தற்போது கால்வாய் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.5,00,000/- வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

தீர்மானம் எண். 171

மழைக்காலம் என்பதால் அவசர அவசியம் கருதி கால்வாய் தூர்வாரும் பணி மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/4/22

**பொருள் எண்.20**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 28வது வார்டில் அமைந்துள்ள ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் நகர், ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் நகர் இணைப்பு, ஸ்ரீ அருணாச்சலேஸ்வரர் நகர் விரிவாக்கம் 1 & 2, ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர், ஸ்ரீ மகாலட்சுமி நகர், உதயம், கே.எம்.நகர் மற்றும் பிற பகுதிகளில் அந்நிய நபர்களின் நடமாட்டத்தை கண்டுபிடிக்கவும் மற்றும் குற்றங்கள் நடைபெறுவதை தடுக்கவும் தேவைப்படும் பகுதிகளில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் CCTV கேமரா பொருத்தக்கோரி ரூ.197646/- விலைப்புள்ளியுடன் வரப்பெற்ற 28 வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும், முடிவிற்கும்.

தீர்மானம் எண். 172

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/4/22

**பொருள் எண்.21**

குன்றத்தூர் நகராட்சியில் 2022-2023ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் செய்ய உரிய ஆவணங்களுடன் வரப்பெற்ற கீழ்க்காணும் விவரப்படியான 2 விண்ணப்பங்கள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | குறிப்பு |
|---|---|---|
| 1. | திருமதி.K.தனலட்சுமி, எண்.463, 6வது மேற்கு தெரு, மேத்தா நகர், குன்றத்தூர், சென்னை - 600069 | ஒப்பந்தம் புதுப்பித்தல் |
| 2. | திரு.D.மோகன் த/பெ K.தசரதன், எண்.10, கங்கையம்மன் கோயில் தெரு, குன்றத்தூர், சென்னை - 600069. | ஒப்பந்தம் புதுப்பித்தல் |

தீர்மானம் எண். 173

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/4/22

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.22**

குன்றத்தூர் பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.11.2021ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளை தன்வசப்படுத்திக் கொள்ள காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் (இ) படப்பை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

1 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கரைமாநகர், குன்றத்தூர்

2 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, பெருமாள் கோயில் தெரு, நத்தம்

3 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, மலையடிவாரம், நத்தம்

4 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, குன்றத்தூர் பேருந்து நிலையம் எதிரில்

தீர்மானம் எண்.174

மேற்படி பள்ளிகளை குன்றத்தூர் நகராட்சி தன்வசப்படுத்திக் கொள்ள காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் (இ) படப்பை ஆகியோருக்கு கருத்துரு அனுப்ப ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

**பொருள் எண்.23**

குன்றத்தூர் நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் பணிப்பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் சரக்கு மற்றும் சேவை வரியினை e-filing செய்வதற்கு ஒரு ஆண்டுக்கு ரூ.200000/- தோராய செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

தீர்மானம் எண்.175

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

**பொருள் எண்.24**

குன்றத்தூர் நகராட்சியில் பசுமையை அதிகரிக்கவும் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்தவும் மணிகண்டன் நகர் பூங்கா மற்றும் மேத்தா நகர் பூங்கா ஆகிய பகுதிகளில் நடுவதற்கு மரக்கன்றுகள் சப்ளை செய்ய விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| Sl. No | Description of Items | Rate Quoted by C.N.Ramachandran | | Rate Quoted by S.Gopi | | Rate Quoted by N.Sivakumar | |
|---|---|---|---|---|---|---|---|
| | | No | Amount Rs. | No | Amount Rs. | No | Amount Rs. |
| 1 | Supply and planting avenue trees 6 feet to 8 feet height | 1 No | 650 | 1 No | 700 | 1 No | 750 |
| 2 | Supply and planting flower plants 1 feet to 1.5 feet height | 1 No | 91 | 1 No | 100 | 1 No | 150 |
| 3 | Supply and planting of hedge plants | 1 No | 46 | 1 No | 50 | 1 No | 60 |
| 4 | Supply of farm yard manure | 1 No | 7800 | 1 No | 8000 | 1 No | 8500 |

தீர்மானம் எண்.176

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|

**பொருள் எண்.25**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நில அளவை எண்.127/2-ல் நெடுஞ்சாலை துறைக்கு போக மீதி உள்ள (10 x 10) 100 சதுர அடி நிலப்பரப்பில் சுமார் 50 சதுர அடி இடத்தில் மட்டும் மறைந்த முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் முழு உருவ சிலை அமைக்க அனுமதி கோரி வரப்பெற்ற திரு.த.கந்தசாமி, நகர துணை செயலாளர், குன்றத்தூர் தி.மு.க அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் சிலை மற்றும் தெரு பெயர்கள் வைப்பது சம்மந்தமாக அரசுக்கு கருத்துரு அனுப்பி அரசு முடிவின் தன்மை குறித்து முடிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சிலை வைப்பது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் பரிந்துரை செய்யலாம்

தீர்மானம் எண்.177

சிலை வைப்பது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

**பொருள் எண்.26**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 15வது வார்டு பகுதியில் உள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள Fluorescent விளக்குகள் LED விளக்குகளாக மாற்றக்கோரி வரப்பெற்றுள்ள 15வது வார்டு நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

தீர்மானம் எண்.178

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

**பொருள் எண்.27**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருமலை நகரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திறந்த வெளிக்கட்டணம் திட்டத்தின் கீழ் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாடு பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

தீர்மானம் எண்.179

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

**பொருள் எண்.28**

குன்றத்தூர் நகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு வெள்ளத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான மணல் மூட்டைகள், தளவாட பொருட்கள் மற்றும் மின்மோட்டார்கள் கொள்முதல் செய்யவும், இதற்கான தோராய செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

தீர்மானம் எண்.180

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

30/9/22

| வ. எண். | பொருள் |
|---|---|

**பொருள் எண்.29**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு கீழ்க்காணும் பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் (Borewells) அமைக்கவும் மற்றும் அடிப்படை வசதி பணிகள் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1. | மணிகண்டன் நகர் பூங்காவில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி | 380000 |
| 2 | குன்றத்தூர் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (RO Plant) ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணி | 380000 |
| 3 | திருப்பதி நகரில் பைப்லைன் அமைத்தல் | 280000 |
| 4 | வார்டு எண்.28 காமாட்சியம்மன் நகர், தாய்சுந்தரம் நகர், வர்ஷா நகர், வர்ஷா நகர் அனெக்ஸ், மாணிக்கம் நகர், சரஸ்வதி கார்டன், P.J.N நகர் ஆகிய பகுதிகளிலுள்ள குறுக்கு தெருக்களில் புதியதாக பைப்லைன் அமைத்தல் | 300000 |
| 5 | பொன்னியம்மன் கோயில் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு சுற்றுச்சுவர் மற்றும் காவலர் அறை அமைத்தல் | 870000 |
| 6 | மெட்ரோ ஹைடெக் பூங்காவில் நடைபாதை அமைத்தல் | 890000 |
| 7 | மேத்தா நகர் 3, 4,5, 6, 7, 8வது கிழக்கு தெரு பகுதிகளில் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் | 900000 |
| 8 | மேத்தா நகர் 9, 10, 13, 14, 15வது கிழக்கு தெரு பகுதிகளில் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் | 900000 |
| 9 | மேத்தா நகர் 17, 18வது கிழக்கு தெரு பகுதிகளில் பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் | 520000 |
| 10 | கால்வாய்கரை குறுக்குத் தெரு மழைநீர் வடிகால் பணி | 520000 |
| 11 | பாபா கோயில் தெரு மழைநீர் வடிகால் பணி | 250000 |
| 12 | கொல்லைத்தெருவில் மழைநீர் வடிகால் பணி | 980000 |

**பொருள் எண்.30**

குன்றத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டு பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறாக சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றித் திரியும் மாடுகள், பன்றிகள் மற்றும் நாய்கள் ஆகியவற்றினை பிடிப்பதற்கு நகர மன்ற உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கும்.

| தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|

தீர்மானம் எண்.181

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 3/4/22

தீர்மானம் எண்.182

ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(கையொப்பம்) 30/4/22

# தீர்மான புத்தகம்

| வ. எண். | பொருள் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | **பொருள் எண்.31**<br>குன்றத்தூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வரும் மேற்பார்வையாளர் – 1 எண்ணிக்கை மற்றும் பரப்புரையாளர் 4 எண்ணிக்கை ஆகியோர் தூய்மை இந்தியா திட்டம் / திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் சுற்றுப்புற தூய்மை குறித்த அனைத்து விழிப்புணர்வு பணிகள் மேற்கொண்டமைக்கு மே, ஜூன், ஜூலை-2022 மாதங்களுக்கு ஊதியம் ரூ.1,68,712/-ஐ ரீவார்டு சொசைட்டி நிறுவனத்திற்கு வழங்கியது மன்றத்தின் ஒப்புதலுக்கு மற்றும் ஆகஸ்டு-2022ம் மாதத்திற்கான ஊதியம் ரூ.86402/- வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு. | | தீர்மானம் எண்.183<br>ஒப்புதல் அளிக்கப்படுகிறது.<br>[signature] 2/9/22<br>நகரமன்ற தலைவர்<br>குன்றத்தூர் நகராட்சி |